J. R. T. S.] GENERAL SERIES. [No. 50.

# THE SALVATION OF THE SOUL.

A Tract of 16 pages, is a translation of the Parent Society's Tract Krishna Pal.

# ஆத்துமஇரட்சிப்பு.

விட்டுணு சமயத்தைவிட்டுக் கிறிஸ்தவனாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குங் கிருட்டினபாலர் தமது சங்கதிகளைச் சுருக்கமாகக் காட்டியது.

---

வங்காளத்தில் உள்ள சந்திரநாகூரிலே விட்டுணு சமயத்தாருக்குட் பிறந்தவனாகிய நான் வெகுகாலமாய்ச் சாதிக்கட்டுக்கு இடறில்லாமல் நடந்துவந்தேன். குருவினாலும் பிராமணர்களாலும் உபதேசப்பண்ணப்பட்டிருந்ததுமே அல்லாமற் குரு என்னைக் காணவருந் தருணங்களில் அவருடையதரிசனை அடைவதினாலே தினந்தோறும் நான் செய்யும் நித்திய கருமங்களை முதலாய்ச் செய்யத் தேவையில்லையென்றுசாத்திரக்கருத்தின்படிவிட்டுப்போட்டு அவருடைய தயவைப் பெறுவதற்கு அவருடைய கால்களைக் கழுவிக் கழுவின சலத்தை என் தலையிலும் மேனியிலுந் தெளித்துக்கொண்டு அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வேன். இப்படி இருந்துவருகிற காலத்தில் நானும் ஒரு குருவாகிப் பிறருக்குப் போதகம்பண்ணி

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1844 †

ஆடி



எற்றவர்களாய்வருகிறவர்களைச் சீக்கிராக்கி என் முன்னோர்களுடைய பழக்கத்தைக் கைக்கொண்டு நாற்பது வயதளவும் நடந்து வந்தேன். அதன்மேற் பராபரன் என்னிலிரங்கி மனவிருளிலும் மரணநிழலிலும் அகப்பட்டுத் துக்கத்துக்கும் கேட்டுக்கு மேதுவாயிருந்த ஏழைப்பாவியாகிய நான் கெட்டுப்போகாமல் இயேசுக்கிறிஸ்தவை விசுவாசித்துப் பாக்கியமான வழியிலே நடக்கும்படிக்குத் தெய்வவெளிச்சத்தையும் நித்திய வாழ்வையுந் தருவதாகிய தமது சுவிசேஷத்தை எனக்கு அனுப்பினார்.

எப்படியெனில் ஒரு நாள் நான் என் பிள்ளைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வாங்கப் போம் வழியிலே தோமாஸ் என்கிற ஒரு பரிகாரித்துரையும் அவரோடேகூட வேறேஇரண்டு குருமாருங் கடைத்தெருவிலே பிரசங்கிக்கப் புறப்பட்டு வந்தார்கள். தாங்கள் நற்செய்தி அறிவிக்கப் போகிறோமென்கிறதாக என்னையுந் தங்களோடே வரச்சொல்லி அழைத்தபொழுது கூடிக்கொண்டு போனேன். போன பின்பு தோமாஸ் என்கிற துரை எனக்கும் வேறே அநேகருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தினலுண்டாகும் இரட்சிப்பை அறிவித்து மனிதருடைய பாவங்களை நிவிர்த்திசெய்ய ஒரு தகுதியான பலிசெலுத்த வேண்டியதாயிருந்ததைக் கிறிஸ்துநாதர் கண்டு தம்மைத்தாமே பலியாகக் கொடுத்ததினால் அவருடைய மரணமே அதற்குத் தகுதியான தென்று விசுவாசிக்கிறவர்கள் சகலரும் இரட்சிப்பை அடைவார்களென்றுஞ் சொன்னார். இப்படியே பராபர

ன் என்மேற் கிருபையுள்ளவரானதினால் நான் எங்கள் சாத்திரங்களிற் பாவத்துக்குத் தகுதியான நிவிர்த்தி சொல்லப்பட்டிருக்கவில்லையென்று அதிலே பாவந் தீருவதற்கு ஒரு மெய்யான வழியுமில்லையென்றுங் கண்டு அன்று முதலாக நான் இக்காரியங்களை என்னுடைய இனத்தார் சனத்தாரிடத்திலே ஆராயவுங் குருமாரிடத்திலே போய்ப் புத்திகேட்டுப் படிக்கவும் இதற்கு அடுத்த வழிவகைகளைச் சிந்திக்கவுந் தொடங்கினேன். அதற்குப் பின் ஒருநாள் கருத்தர் தம்முடைய கிருபையை அதிகமாக வெளிப்படுத்தினார். எப்படியெனில் நான் குளத்திலே முழுகப்போய்ச் சறுக்கி விழுந்து கையொன்று பொருத்து விலகிப் போனதினால் என் உறவு முறையாரில் ஒருவன் கிறிஸ்துமார்க்கக் குருமார் வீட்டிலே தோமாஸ் வைத்தியரிருக்கிறாரென்று சொல்லக் கேட்டு அவருக்கு ஆள் அனுப்பினபொழுது அந்த வைத்தியர் வந்து எனக்கு மருந்துபோட்டுச் சுறுக்கிலே சுகப்படுத்திவிட்டதுந் தவிர ஒரு நாள் என்னைப்பார்த்து ஒரு பிதா தன் பிள்ளையைச் சீர்ப்படுத்தத் தண்டிக்கிறது போலவும் வைசூரியால் மிருந்த வருத்தத்தை அடையாதபடிக்குக் கையிற் குத்திப் பாலிட்டுக் கட்டுகிறது போலவுங் கருத்தாவும் மனிதரைக் குணப்படுத்தும்படி இப்படிப்பட்ட உபத்திரவங்களை வரவிடுகிறாரென்று சொன்னார். மறுபடியும் அன்று பின்னேரம் சொல்லப்பட்ட வைத்தியரும் மார்ஷ்மன் என்கிற வேறொரு ஐயருமாகச் சில சிறு புத்தகங்களையுங் கொண்டுவந்து எனக்கிட்ட தி

ன்ற சனங்களுக்கும் வாசிக்கச் சொல்லித் தந்தார்கள். அந்தப் புத்தகங்களிலே பாவத்தை அறிக்கையிட்டு அதை வெறுத்துவிட்டு இயேசுக்கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கிறவன் இரட்சிக்கப்படுவானென்று சொல்லியிருந்தது.

அது முதல் நான் குருமாருடைய வீட்டுக்குப் போக்கும் வரத்துமாயிருந்ததினால் வாரட் ஐயரும் கேரி ஐயரும் எனக்குப் பரிசுத்த வேத வசனத்தை வாசித்து வெளிப்படுத்தி வருவார்கள். அப்படியிருக்கையில் வைத்தியராகிய தோமாஸ் என்பவர் ஒருநாள் என்னைப்பார்த்து அந்த ஐயர்மார் உனக்குச் சொன்னது நன்றாய் விளங்கிற்றோவென்று கேட்க ஆம் இயேசுக்கிறிஸ்து பாவிகளை இரட்சிக்கத் தம்முடைய சீவனை விட்டாரென்பதாக விளங்கிற்று. அல்லாமலும் நானும் என்னுடைய சிநேகிதன் கொக்கூலனென்கிறவனும் அதை நம்பிக்கொண்டோமென்றுஞ் சொன்னேன். அதைக் கேட்டபொழுது தோமாஸ் ஐயர் அப்படியானால் நீ என் சகோதரனே. பின்னைவா, நாமொருமிக்கப் பட்சமாய்க் கூடி ஒன்றாகச் சாப்பிடுவோமென்றார். அந்நேரம் போசனமுமாயத்தமாயிருந்ததினாற் குருமாரும் நானுங் கொக்கூலனுங் கூட இருந்து சாப்பிட்டோம்.

உடனே அந்தச் செய்தி அவ்விடத்து வேலைகாரர் வழியாய்ப் பட்டினம் முழுவதும் அறியவந்ததினால் எங்கள் வீட்டுக்கு வந்தபொழுது எங்கள் இனத்தார் எங்களை நிந்தனைபண்ணினதுமல்லாமல் வீட்டுக்கு வந்து என் மூத்தமகளையும் என்னைவிட்டுக் கூட்டிக்கொண்டுபோய்

விட்டார்கள். வேறுசிலர் என்னையும் என் பெண்
சாதியையும் நியாயாதிகாரியிடத்திலே கொண்
டுபோய்விட்டார்கள். அவரும் இவர்கள் என்ன
குற்றஞ் செய்தார்களென்று விசாரிக்குமளவி
ல் அவர்கள் இவன் வெள்ளைமனிதரோடே சா
ப்பிட்டுத் தன் மூப்புக்கு நடக்கிறான் என்றார்க
ள். அதற்கு அவர் தான்செய்யக்கூடிய தொன்
றும் இல்லை என்று சொல்லித் தேசத்தை ஆளு
ந் துரையிடத்துக்கு என்னைக் கொண்டுபோக
ச் சொன்னார். அப்படியே அவரிடத்திலுங்
கொண்டுபோக அவரும் அந்தக் கேள்வியைத்
தான் கேட்டபொழுது அவர்களும் முந்திச்
சொன்ன குற்றத்தைக் காட்டிச்சொல்ல துரை
யானவர் நல்லது இவனொரு கிறிஸ்தவனானதே
அல்லது வெள்ளைக்காரனாக வில்லையென்றுங் கி
றிஸ்தவன் ஆனதே நல்லகாரியம் என்றும் இனி
அவன்மேல் வரப்போற முறைப்பாடுகளுக்கு
நானே மறுமொழி சொல்லுவேன் என்றும் அ
வனுக்கு யாதொரு சேதமும் வருவிக்கவேண்
டாம் என்றுஞ் சொன்னார். அந்நேரம் நானும்
அவருக்கு என் மகளை உறவுமுறையார் கொண்
டுபோயிருக்கிறார்களென்று அறிவித்தேன். அ
வர் அது கேட்டவுடனே இரண்டு சேவகரை
அனுப்பி என் மகளை விட்டுவிடும்படிக்குக் கட்
டளையிட அவர்கள் நான் சாதிக்கு இனப்பட்டு
விட்டேனென்றும் என் மகள் அப்படி இனப்
படவில்லையென்றுஞ் சொல்லி விடாமல் வழிவ
கை காட்டினபொழுது அவர் மறுபடியுங் கண்
டிப்பாய் என்னிடத்திலேவிடக் கட்டளையிட்ட
தினால் அவளை என்னிடத்தில் ஒப்புவித்தார்கள்.

மேலும் நான் அவளைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போகும்பொழுது ஐஞ்ஞூறு அறுநூறுபேர் ஒருமிக்கக் கூடிக்கொண்டு என்னைப் பார்த்துக் கைதட்டிச் சரசம்பண்ணிப் பறங்கி பறங்கியென்று கூப்பிட்டு வெட்கப்படுத்தினார்கள். அதைக் கண்டு என் பெண்சாதியும் என்னிடத்தில் வந்து நம்மை எல்லாரும் பறங்கிக்காரரென்று வசை சொல்லுகிறார்களே என்று அழுதழுது சொன்னாள். அந்நேரம் சேரி ஐயரும் எங்கள் துயரத்தைக் கண்டு என் பெண்சாதியைப் பார்த்து நீ அழாதை. நீங்கள்படுகிற இந்தத் துயரம் உங்களுக்கு வாராவந்தியாயிருந்தாலும் எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் நீங்கள் படவேண்டியிருக்கின்றதென்று சொன்னார்.

இது தவிரக் கொக்கூலன் என்னைப் பார்த்துச் சிநேகிதனே, ஒரு விக்கினத்துக்குத் தப்பிக்கொண்டோம். இன்னமொன்று நமக்கு வருகிறதாயிருக்கின்றது. என்னவெனில் நமது இனத்தவர்களும் பட்டினத்திலுள்ள சில பிரதானிகளும் ஒத்துக்கொண்டு இன்றிராவிலே கள்வரைப் போல வேடமாறிவந்து நம்மைச் சதிசெய்ய நினைத்திருக்கிறார்களென்று சொன்னான். உடனே இது காரியத்தை நான் வாரட் ஐயருக்கு அறிவித்ததினால் அவர் ஊரை ஆளுகிற பெரிய துரைக்கு அறிவிக்கத் துரையும் யாதாமொருத்தர் என் வீட்டுக்கு இராக்காலத்திற் பேசாமல் வந்தால் அப்படிப்பட்டவர்களைக் கேள்வியில்லாமல் வெடிவைத்துப்போடலாமென்ற கட்டளையுடனே ஒருகாவற்காரனை

அனுப்பி வீட்டுகளுக் காவல் வைத்தார். ஆனதினால் ஒருவரும் எங்களுக்கு அப்புறம் யாதொரு விக்கினமுஞ் செய்யத் துணியவில்லை.

இப்படிச் சிலநாட் சென்றபின் நானுங் கொக்கூலனும் என் பெண்சாதியும் அவள் சகோதரியும் ஞானஸ்நானம்பெற்றுக் கிறிஸ்துவின் சபையிலே சேர்ந்தோம். இதின் மேல் ஒருநாட் குருவானவர் என்னையுங் கொக்கூலனையும் பார்த்து நீங்கள் யேசோரென்ற ஊருக்குப் போய்த் திடாரிக்கத்துடன் நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தினாற் பாவிகளுக்குப் பாவப்பொறுத்தலும் நித்தியவாழ்வுமுண்டாயிருக்கிறதென்கிற சந்தோஷமான செய்தியை அறிவியுங்களென்று சொல்லிச் சனங்களுக்கு வாசிக்கக் கொடுக்கச் சில சிறுபுத்தகங்களையும் எங்கள் கையிலே தந்து அனுப்பிவிட்டார்.

அப்படியே போகையில் நாங்கள் சாகிவத்தென்கிற ஊருக்குப் போய் வேதத்தை வாசித்து வெளிப்படுத்த அநேகர் அதை உற்றுக் கேட்டுக் கொடுத்த புத்தகங்களையுந் தடையின்றி ஏற்றுக்கொண்டார்கள். அன்றுபின்னேரம் சில பிராமணர் எங்கள் விடுதிக்குவந்து பிராமணர்களுடைய காலம் இன்னம் நெடுக நிற்குமோவென்று கேட்க அது எங்களுக்குத் தெரியாது நாங்கள் மனிதருக்கு ஆத்தும இரட்சிப்பை அறிவிக்கும் பொருட்டாக வந்ததல்லது வேறொன்றுக்குமல்லவென்று சொன்னோம். அப்பொழுது அந்தப் பிராமணர் ஆத்தும இரட்சிப்பாவதென்னவென்று கேட்க நாங்கள் தேவவசனத்தை வாசித்து ஏகரட்சகரான கிறிஸ்துநாதரி

ன்வழியாய் வரும் இரட்சிப்பை அறிவித்தோம்.
அதற்கு அவர்கள் எங்களுடைய சமயத்திலே இ
ரட்சிப்புக் கிடையாதோவென்றார்கள். நானும்
ஐயமாரே, கேளுங்கள். பாவத்துக்கு இடங்கொ
டாமல் அதை வெறுத்துத் தள்ளும்படிக்கு உ
ங்களுக்குள்ளே யாதொரு சட்டளையும் இல்லை
யே. உங்கள் புராண காவியங்களிலே பாவப்
பொறுத்தல் பரிசுத்தகுணம் முதலிய நன்
மைகளைப் பெறும் வழி அறிவித்திருக்கவில்லை
யே. உங்கள் தேவர்கள் பிறந்ததையும் அவர்க
ள் செய்த சமர்த்துக்களையுமே சொல்லியிருக்
கின்றது. பின்னை இவைகளிரட்சிக்குமாவென்று
கேட்டோம். அதற்கு அவர்கள் ஒருவன் மரண
வேளையிலே இராமா அல்லது கிருட்டிணாவெ
ன்று சொன்னால் தன் பாவந்தீர்ந்து மோட்சம
டைவானென்று சொல்ல நாங்கள் அவர்களைக்
கை அமைத்து அப்படியே மோட்சமடையக்
கூடியதாயிருந்தால் தேசாந்தரியாய்த்திரிகிறது
ம் பிராமணர்களுக்குத் தானங் கொடுக்கிறதுந்
தினபூசை செய்கிறதும் மற்றும் புண்ணியங்க
ளைச் செய்கிறதும் விருதா என்பது நிசமே. இ
வர்கள் பாவிகளை இரட்சிக்கக் கூடுமோ. இவர்
களை விசுவாசிக்கிறவர்களுக்குக் குருடனுக்குக்
குருடன் வழிகாட்டினால் இருவருங் குழியிலே
விழுவதுபோல வந்து முடியுமே என்றுஞ்
சொன்னோம். அப்பொழுது இவர்கள் சாதிக்
கட்டை அழித்தவர்களாயிருக்கிறதினால் இவர்
களோடே கூட்டாகாதென்று போய்விட நா
ங்களும் அந்த இடத்தை விட்டுச் சிறம்பூருக்கு
த் திரும்பினோம்.

பின்னொரு முறை திணகபுரத்துக்கும் போய்
ப் பதினாலுநாளிருந்த பின்பு நாகரத்திலே அச்
சுப்போடப்பட்ட புத்தகங்கள் மூந்நூறுபோ
லே எடுத்துக்கொண்டு தனியே காசி யென்கி
ற தலத்துக்குப் பிரயாணம்பண்ணி வழிக்குவ
ழி தேவ வசனத்தைச் சனங்களுக்கு அறிவித்து
க் காசிக்குப்போய்ச் சேர்ந்தபொழுது அவ்வி
டத்திற் பிராமணர்கள் என்னைப் பார்த்து இவ
ன் சிறம்பூரிலிருந்து சாதிக்கு இனமாக நடந்
து சமயக்கட்டுக்களையுங் கொலைத்துப் போட்
டு இவ்விடத்திலும் அப்படிச்செய்ய வந்துவி
ட்டானென்று என்னைப் பிடித்துக்கொண்டு
போய்க் காவற்காரர் வசம் ஒப்புவித்தார்கள்.

அப்படி நான் காவலில் இருக்கையிலே அவ்வூ
ரிலிருக்கின்ற ஒரு உத்தியோகத் தலைவர் என்
னுடனே இந்த ஊருக்கு வந்ததென்னவென்று
கேட்டார் அவருக்கு என்னுடைய நோக்கத்
தையுங் கருத்தையுஞ் சொன்னமாத்திரத்திலே
அவர் என்னிடத்திலிருந்த புதிய ஏற்பாட்டி
லொன்றையெடுத்து ஒரு பகுதியைப் பார்த்து
அதில் அடங்கியிருந்த காரியங்களைக் குறித்து
அதிசயப்பட்டுச் சேக்கோலிலிருக்கும் நியாய
த் துரையிடத்திற்போய் இந்தப் புத்தகங்களைச்
சனங்களுக்குக் கொடுக்க அவரிடத்தில் உத்தர
வுபெற்றுக்கொண்டு ஊரிலே நடமாடிக் கொ
டுவென்று சொல்லி என்னோடே ஒரு சேவகனை
யும் விட்டு அந்தத் துரையிடத்தில் அனுப்பின
பொழுது பத்துப் பன்னிரண்டு பிராமணர்களு
ம் விடாமற் கூடிக்கொண்டு வந்தார்கள். இப்
படி இவர்களோடே நான் அந்தத் துரையிடத்

திற் போய்க் கேரிஐயர் எனக்குத் தந்திருந்தபி
ரயாணத்தினுத்தாரச் சீட்டையும் ஒருவேதபுத்
தகத்தையும் கூட அவர் கையிற் கொடுக்க அவ
ர் சீட்டை வாசித்துக்கொண்டு என்னைப் பார்த்
து நீ கிறிஸ்தவனேவென்று கேட்டதுமன்றி நீ
இவ்விடத்தில் வெகு நாளைக்கு நிற்கவேண்டாம்
நின்றால் இந்த ஊரார் உனக்கு இயாதொரு தீ
ங்கை வருத்துவிப்பார்கள். நீ இவ்விடத்தை விட்
டுச் சுறுக்கிலே போய்விடு என்றும் புத்தியாய்ச்
ச்சொன்னார்.

அதினாலே நான் அவ்விடத்தை விட்டு இரா
மல் நாகூருக்குப் போய்க்கிறிஸ்துநாதர்மனித
அவதாரம்பண்ணினதையும் அவரால் மனிதரு
டைய பாவங்களுக்கு நிவிர்த்தி உண்டானதையு
ம் பிரசங்கம்பண்ணி மறுபடியுஞ் சிறம்பூருக்
குப் போயிருந்தேன். சிலநாட் சென்றபின்
அவ்விடமும் விட்டுக் கல்குத்தாவுக்குப்போய்
ஐந்துவருஷச் காலமாக இருந்து இருபது வீட்
டுக்கு மாறி மாறிப் பிரசங்கம்பண்ணினதும் அ
ன்றிச் சில தருணங்களில் அங்குமிங்கும் போ
ய்த் தேவவசனத்தை அறிவித்தும் வந்தேன். அ
தைக் கேட்டவர்களில் அநேகர் கிறிஸ்துவின்
மேல் விசுவாசித்து ஞானஸ்நானம்பெற்றார்க
ள். இதன் பின் குருமாருடைய சொல்லுக்கு
நானும் என் ஊர்ப் பிறந்த வேறொருவனுங் கூ
டிக்கொண்டு சிலாத்தென்ற ஊருக்குப் பிரயா
ணப்பட்டுப் போகையிலே இடக்காவென்ற ஊ
ரிலே தரித்துப் பிரசங்கம்பண்ண அவ்விடத்தி
ற் சங்கையுள்ளவர்களாகிய வெகு துலுக்கர் எ
ன்னை அழைப்பித்ததினால் அவர்களுக்குப் பார்

ஸ் பாஷையிலே அச்சுப் பதித்த ஒரு வேத புத்தகத்தைக் கொடுத்துப் பத்துநாளாக அவர்களோடேயிருந்து பின்பு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய் அச்சுமீரிலும் பாயதலிலுந் தரித்துப் பராபரனுடைய வசனத்தை அறிவித்துக்கொண்டு சிலாத்தெனற ஊரில்வந்து சேர்ந்த பின் அவ்வூரில் நியாயத் துரைக்குக் கொண்டுபோன காகிதத்தைஅவர் கையிற் கொடுக்க அவர் வாங்கிக்கொண்டு என்னிடத்திலிருந்த புத்தகங்களைப் பார்க்கவேண்டுமென்று வாங்கிப் பார்த்துச் சந்தோஷப்பட்டு இந்தப் புத்தகங்களை விரும்பிக் கேட்கிறவர்களுக்குக் கொடுவென்று சொல்ல அப்படியே நானும் அவ்விடத்திற் சனங்களுக்குப் பிரசங்கம்பண்ணிப் புத்தகங்களுங் கொடுத்ததின்மேல் அந்தத் துரை காசிப்பட்டினத்துக்குப் போகச் சொல்லி அவ்விடத்திலுள்ள அதிகாரிகளுக்குக் காகிதங்களுந் தந்து காவலாக ஒரு சேவகனேயுங் கூட அனுப்பினர். நானும் அந்தப்பட்டினத்துக்கு மூன்று நாளிலே போய்ச் சேர்ந்து கொண்டுபோன காகிதங்களையும் அந்த அதிகாரிகளிடமாகக் கொடுத்தபின் அவர்கள் சொன்னவிடுதியிலே இருந்துகொண்டு அவ்வூரிலேயும் இயேசுக்கிறிஸ்துவினுலுண்டாகும் இரட்சிப்பின் சந்தோஷமான செய்தியைப் பிரசித்தப்படுத்தினபொழுது நானு காவற் சேவகர்களுங் காசிப்பட்டினத்தாரில் இரண்டுபேரும் வேறே அசமென்னுந் தேசத்தாளுெருவனுந் தங்கள் விக்கிரகபத்தியை விட்டு மெய்யான பராபரனிடத்தில் மனந்திரும்பினதினல் அவர்

கள் ஏழுபேருக்கும் ஞானஸ்நானம்பண்ணினே ன். அந்நேரத்தில் அதைப் பார்க்கப் பெரிய சங்கைமான்களாக எட்டுப்பெயர்வந்தார்கள். பொதுவான சனங்களில் அறுநூறுபெயர்மட் டுக்கு வந்தார்கள். அவ்விடத்தில் எட்டுமாத மாகத் தரித்திருந்து சுவிசேஷத்தைப் பிரசங்க மாய் அறிவித்துச் சிறம்பூருக்குத் திரும்பினே ன். பின்பு சிறம்பூரையும்விட்டுக் கத்துவம்பி ரகமபுரி,தினகபுரம் முதலான ஊர்களிற் போ ய்த் தேவவசனத்தை அறிவித்துவருகிறவரை யிற் சிலபேர் கிறிஸ்துவின்மேல் விசுவாசித்து ஞானஸ்நானம்பெற்ருர்கள். பின்பு வேறொ ரு பட்டினத்துக்குப் போய் அவ்விடத்தாருக் க்குத் தேவவசனத்தை அறியப்பண்ணிக்கொ ண்டிருந்து ஆறு வருஷத்தின்மேல்மறுபடியு ந் தினகபுரிக்கு வந்து அவ்விடத்திலுஞ் சுவிசே ஷத்தைச் சொல்லி வரப் பன்னிரண்டுபேர் ஞா னஸ்நானம்பெற்றுக் கிறிஸ்தவர்களானுர்கள்.

அதுவுந் தவிர இந்தத் தினகபுரியிலே என் பேரப்பிள்ளை ஒருத்தி காய்ச்சலாய்ப் பதினு லுநாளளவும் வருத்தப்பட்டுச் சாகப்போகிற வேளையில் என்னை அழைத்து வேதபுத்தகத் தை வாசித்துப் பராபரனை நோக்கித் தனக்கா க வேண்டுதல்பண்ணச்சொல்லிக் கேட்டதினு ல் வாசித்து அவளுக்காக மன்றுடினபின் அவ ளும் இந்தப்பிரகாரங் கிறிஸ்துவின்மேலே மெ ய்விசுவாசங் கொண்டு செத்துவிட்டாள்.

நான் ஞானஸ்நானம் பெற்றது முதற்கொ ண்டு இவ்விருபத்தொரு வருஷக்காலமும் இ ப்படியே தேவதொண்டுசெய்து வந்தேன்.

இப்பொழுதுந் தக்காவென்ற ஊருக்குப்போ
க ஒரு ஆசையுண்டு முன்னமே விக்கிரகபத்தி
யிலே அமிழ்ந்திச் செத்தவனயிருந்தேன். இ
ப்பொழுதோ அந்த அவபத்திக்கு நீங்கலாகி நி
த்திய பராபரனுடைய குமாரனகிய இயேசு
க்கிறிஸ்துவுக்குள் நம்பிக்கைகொண்டு உயிரடை
ந்தவனயிருக்கிறேன். பாவத்தினுற் செத்துக்கி
டக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கி
ப்பதற்கு நான் நிசமிக்கப்பட்டிருக்கிறபடியே
பராபரன் என்னைத் தீங்கில்லாமற் காக்கவும் எ
ன் பிரயாசத்தை வாய்க்கப்பண்ணவுங் கடைசியி
ல் இயேசுக்கிறிஸ்துவின் வழியாய் நித்திய மோ
ட்ச பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளவும் பரா
பரனை நோக்கி அவரை வேண்டுதல்செய்கிறே
னென்று கிருட்டிணபாலர் என்பவர் எழுதினுர்.
இந்தப் பிரகாரம் அவர் இதை எழுதினத
ற்கு அடுத்த ஆவணிமாதத்திலே வியாதியாய்
விழுந்து சில நாளாக வருத்தப்பட்டு மரணத்
திக்குக் கிட்டினவராய் இருக்கிறதினுல் அ
வரைப் பார்க்க அநேகர் அங்கே வந்திருந்
தார்கள். அவரும் அந்த மரண வேளையில்
தம்மைச் சூழ்ந்து இருந்தவர்களெல்லாருக்கு
ந் தம்முடைய மன ஆறுதலையுந் தாம் எந்தப்
பிரகாரமுந் தேவ சித்தத்துக் கிணங்க நடக்க
வேண்டுமென்று பிரயாசப்பட்ட விதத்தையும்
இயேசுக்கிறிஸ்துவினுலே வரும் பாக்கியத்தை
யும் ஆதரவையும் இன்பமாயெடுத்துப் பேசி
அவர்களுக்கு நல்லுணர்வும் வரப்பண்ணினுர்.
அப்பொழுது அவரைப் பார்க்கவந்தவர்கள் எ
ல்லாரும் மெய்யாகவே பராபரன் இவ்விடத்தி

விருக்கிறபடியால் நாம் இவ்விடத்துக்கு வந்த து நல்லது நம்முடைய முடிவும் இவருடைய முடிவைப்போலே இருந்தாலல்லோ பாக்கிய மென்று தங்களிலே சொல்லிக்கொண்டதும ன்றி அவரைப் பார்த்து நீர் கிறிஸ்துவைப் பற் றிக்கொண்ட முகாந்திரமென்னவென்றுங் கே ட்க அவரும் இயேசுக்கிறிஸ்துமாத்திரமே பா வத்தைப் பொறுக்கவும் நித்திய வாழ்வைக் கொடுக்கவுங் கூடியவராயிருக்கிறபடியால் ஒரு பாவியானவன் அவரிடத்தில்அல்லாமற் பின்னை ஆரிடத்திற் போவானென்றும் மரணந் தமக் குச் சற்றும் பயங்கரத்தைபண்ணவில்லையென் றும் மகா வருத்தத்தையும் பாரத்தையுங் கொ ண்டிருப்பதாகிய இவ்வுலகத்திலே நாமின்ன முமிருந்து காலம்விடத் தமக்கு மனமில்லையெ ன்றும் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து தம் மை அழைக்கிறபடியினாலே அவரிடத்திற் போ கிறதே தமக்கு ஆசையாயிருக்கின்றதென்றுஞ் சொன்னார்.

பின்பு மூச்சொடுக்குகிறபொழுது தமக்கு முழுப் பாக்கியமும் நித்தியவாழ்வுஞ் சந்தோ ஷமுங் கிறிஸ்துநாதராலே கிடைக்குமென்று ம் அது வெளியாகத் தமக்குத் தெரிகின்றதெ ன்றுஞ் சொன்னதுமல்லாமல் தம்மைப்போ லே எல்லாரும் இந்தப் பெரிய பாக்கியத்துக் குப் பங்காளிகளாய்ப் போகவேண்டுமென்கி ற ஆசையையுங் காட்டிக் கிறிஸ்துவின் மெய் மார்க்கம் வங்காளம் முழுவதும் பரம்பவுஞ் சனங்கள் எல்லாருங் குணப்பட்டு இரட்சிக்க ப்படவுங் கருத்தர் கிருபைசெய்யும்படி மன்

ரூடுங்களென்றுஞ் சொல்லிச் சிவனைவிட்டார்.

சனங்களே, இப்படி இந்தக் கிருட்டிணபாலர் என்பவர் தாம் உயிரோடிருக்குங் காலத்திலே கங்கை முகத்துவாரந் தொடங்கிக் காசிப்பட்டினம் இருகஅநேக வூர்களைச் சுற்றித்திரிந்து பராபரனுடைய வசனத்தைக்கொண்டு இயேசுக்கிறிஸ்துவினாற் பாவிகளுக்கு உண்டாகும் இரட்சிப்பின்செய்தியை அறிவித்து வந்து பலபல இடங்களிலே அநேகம் பேர்இயேசுக்கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகரென்று நம்பி அவர் மேல் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதற்கேற்ற எத்தனங்களைச்செய்ததுமல்லாமல் அவர் பிரசங்கிக்கிற பொழுதெல்லாஞ் சுவிசேஷத்தை அறிவிக்க மகா ஆசையுங் கரிசனமும் உள்ளவராக இருந்து கத்தராகிய இயேசுக்கிறிஸ்து உண்டாக்கி வைத்த பாவநிவாரணத்தினாலே மாத்திரம் மனிதர் பாவப்பொறுத்தலை அடைந்து மோட்சபாக்கியத்துக்கும் நித்திய வாழ்வுக்கும் ஆளாவார்களென்றும் மகிமையுள்ள மீட்பராகிய கிறிஸ்துநாதருண்டாக்கின பாவ நிவாரணமே பராபரனுடைய நீதிக்கும் பரிசுத்தத்துக்கும் இடமில்லாமற் றேடிவருகிறவர்களுடைய பாவத்தை நீக்குகிறதற்குத் தகுதியானதாயிருக்கின்றதென்றுஞ் சனங்களுக்குப் போதிப்பார்.

சிவசமயத்தான் சாகும்பொழுது யாதொரு நம்பிக்கை யுள்ளவனாய்ச் சாகக்கண்டதுண்டா! கிறிஸ்தவனாயிருந்த கிருட்டிணபாலர் சாவுறுதியில் எவ்வளவு ஆறுதலும் அக்களிப்பும் நித்திய வாழ்வுக்குப் போகிறேனென்கிற உறு

தியான நம்பிக்கையுமுள்ளவருமாய்த் தம்முடைய இரட்சகரோடிருக்க ஆசைகொண்டவருமாயிருந்தாரென்பதையும் உற்றுப்பாருங்கள். பின்னை இவ்விதமான நன்மையை உண்டுபண்ணுகிற சுவிசேஷத்தை ஏற்கமாட்டோமென்றும் இயேசுக்கிறிஸ்து எங்களுக்கு வேண்டாமென்றுஞ் சொல்லாமல் நீங்கள் ஆரானாலுஞ்சரி எல்லாரும் பரிசுத்தமும் நீதியுமுள்ள பராபரனுக்கு விரோதமாய் அநேக பாவங்களைச் செய்து குற்றவாளிகளாய் இருப்பதினாலும் மோட்சமடையும்படி அந்தப் பாவங்களையெல்லாம் நிவாரணஞ்செய்ய வேண்டியதினாலும் பராபரன் தாமே மனிதருடைய பாவம் இயேசுக்கிறிஸ்து மூலமாய் மன்னிக்கப்படுவதேயல்லாமற் பின்னொரு வழியினாலும் மன்னிக்கப்படுவதில்லையென்றும் அவர் சிந்தின இரத்தமே சகல பாவிகளையுஞ் சுத்திகரிக்கத் தகுதியானதாயிருக்கின்றதென்றும் வெளிப்படுத்தியிருப்பதினாலுங் கிருட்டிணபாலரைப் போல நீங்களும் உங்களைப் பாவிகளென்று உணரவும் பாவமன்னிப்பைப் பெற்று நரகவேதனைக்குத் தப்பி மோட்சபாக்கியத்தை அடைவதற்கான விதமாக நடந்துகொள்ளவுங் கிருபைசெய்யும்படி முழுமனதினாலும் பராபரனை நோக்கி வேண்டிக்கொள்ளக் கடவீர்கள்.

---

முற்றிற்று.